விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 098 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை (26.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம் 6 மணி நேர விசாரணை

### குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பின்கதவால் வெளியேறிய மைத்திரி



(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் 6 மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

(13ஆம் பக்கம் பார்க்க)

ஈஸ்டர் மற்றும் புனித வெள்ளியை முன்னிட்டு

## அனைத்து தேவாலயங்களுக்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு மற்றும் புனித வெள்ளியை முன்னிட்டு அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்குமாறும் தேவாலயத்திற்கு வரும் யாத்திரிகர்கள் மற்றும் அவர்களின் பயணப் பொதிகளை பரிசோதிக்கும் வகையில் தேவாலயங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி விசேட வேலைத்திட்டத்தை அமுல்படுத்துமாறும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் 15

சுவிட்ஸர்லாந்திலிருந்து

## நாடு கடத்தப்பட்ட தமிழ்க் குடும்பம்

(பேர்ன்)

சுவிட்ஸர்லாந்தில் புகலிட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழ்க் குடும்பம் ஒன்று நாடு கடத்தப்பட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்து நாட்டின் குடிவரவு, குடியகல்வு சட்டத்திற்கு அமைவாகவே இந்த குடும்பத்தினர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக 15

மே மாதத்துக்கு பின்பே தேர்தல் சூடு பிடிக்கும்

# அரசியல் கூட்டணியா? அப்போது வாருங்கள்

## எதிர்க்கட்சிகளிடம் சந்திரிகா



(கொழும்பு)

மே மாதத்துக்குப் பின்பே தேர்தல் விடயங்கள் சூடு பிடிக்கும். அரசியல் கூட்டணி தொடர்பில் அப்போது பேச்சுக்கு வாருங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகையில் வீதி விபத்து

### பெண் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை பின்னால் வேகமாக வந்த ஹயஸ்வாகனம் மோதி விட்டு தப்பிச் சென்றதில் படுகாயம் அடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு 15

## அரச ஊழியர்களுக்கு ஏப்ரலில் சம்பள அதிகரிப்பு

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் அதிகரிக்கப்பட்ட 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும், குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணமாக 15

## பயங்கரவாதிகளை கண்டுபிடிக்க ஜனாதிபதிக்கு ஆர்வம் இல்லை

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சஜித்




(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன்கூடிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு பதிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபு 15

## நிதியமைச்சுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்



15

போலித் தேரர்கள்

## தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

புத்தரின் குணாதிசயங்கள் மற்றும் பௌத்த மதப் போதனைகள் என்பவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் போலி தேரர்கள் தொடர்பில் 15

குளிப்பதை படம் பிடிக்க முயன்ற

## விற்பனைப் பயிலுநர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

### கொழும்புத்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆண் ஒருவர் குளிக்கும் போது அலைபேசியில் படம் பிடித்த விற்பனைப் பயிலுநர் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

தேசிய நிர்மாணிகள் சங்கம் - வடமாகாணக்கிளையின்
அனுசரணையுடன்
நிர்மாண மேம்பாட்டு மையம் நடாத்தவுள்ள

ஒப்பந்தகாரர்களுக்கான பயிற்சிப்பட்டறை


**நிர்மாணத்துறையில் சட்டத்தின் வகிபங்கு**

முதல் பதிவு செய்யும் 30 பேர்களிற்கு மட்டும்
ஏனையோரிற்கு 2ம் பயிற்சிப்பட்டறை குறுகிய காலத்திற்குள் நடாத்தப்படும்.

அனுமதி இலவசம்

இடம் :- இல.32, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- 30.03.2024
நேரம் :- காலை 9.00 தொடக்கம் 12.30 மணி வரை
தொலைபேசி இல :- 021 222 5534
(தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் காலை 8.30 முதல் மாலை 5.00 வரை)
(237)


# பெங்களூரு வெற்றி



பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூரு 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியாவில் 17வது ஐ.பி.எல் நடைபெறுகின்றது. பெங்களூருவில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப், பெங்களூரு அணிகள் மோதின. டாஸ் வென்ற பெங்களூரு அணி, பீல்டிங் தேர்வு செய்தது.

முதலில் விளையாடிய பஞ்சாப் அணியின் துவக்க வீரர்களாக ஷிகர் தவான் 45 ரன்களும் ஜானி பேர்ஸ்டோவ் 8 ரன்களும் எடுத்து அவுட் ஆகினர். ஜிதேஸ் சர்மா 27 ரன்களும் சாம் கரன் 23 ரன்களும் எடுத்தனர். பிரசிம்ரன்சிங் 25 ரன்கள் எடுத்தார்.

ஷஷங்க் சிங் ஆட்டமிழக்காமல் 21 ரன் எடுத்தார். 20 ஓவரின் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ரன்கள் எடுத்தது. சிராஜ், மேக்ஸ்வல் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

177 ரன்கள் வெற்றி இலக்காகக் கொண்டு அடுத்து களமிறங்கிய பெங்களூரு அணி, 19.2 ஓவரில் 178 ரன்கள் சேர்த்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பெங்களூரு அணியின் விராட் கோலி அதிரடியாக 77 ரன்கள் சேர்த்தார். தினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 28 ரன்களும் மஹிபால் லோம்ரர் 17 ரன்களும் சேர்த்து அணியின் வெற்றிக்கு உதவினர். போட்டியின் ஆட்டநாயகனாக விராட் கோலி தெரிவானார். (ம-7,10)


# விசா விண்ணப்பம்

சுவிஸ் | கனடா | பிரான்ஸ் | லண்டன் | இத்தாலி | சுவிடன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் என்பன பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**அனைத்து நாடுகளுக்குமான Online பதிவுகள் பெற்றுத் தரப்படும். Visa விண்ணப்பங்களும் Online மூலம் பூர்த்தி செய்யப்படும்.**

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.**

வேலை வாய்ப்பு மற்றும் பொன்சர் விசாக்கள் குறிப்பிட்ட அளவு மாத்திரமே கையிருப்பில் உள்ளது - பதிவுகளுக்கு முந்துங்கள்.
(250)

**உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா? கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.**

குடும்பமாக கனடா நாட்டிற்கு விசிட் விசாவில் செல்பவர்களிற்கு ஓர் அரிய வாய்ப்பு. எங்கள் நிறுவனத்தின் மூலம் செல்பவர்களிற்கு கனடாவில் நிரந்தர குடியுரிமை மற்றும் வதிவிட வசதி என்பன இலவசமாக பெற்றுத் தரப்படும்.

நிபந்தனைகளுக்குட்பட்டது.

“தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

**NSA Group of Company (Pvt) Ltd.**
131, Main Street, Jaffna.
**077 266 6429, 077 666 9958, 021 221 0969**



## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (251)
**074 17 37 684**



## லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(252)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
Kingstar Travels & Tours (PVT) Ltd இற்கு
வேலையாட்கள் (பெண்கள்) தேவை.
நேர்முகத் தேர்வு எதிர்வரும் வியாழக்கிழமை 28.03.2024 அன்று காலை 10.30 தொடக்கம் 1.00 P.m வரை நடைபெறும்.
(242)
**076 904 6777 | 077 244 5902**


# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரம் சிவபாக்கியம்



தோற்றம் 12.04.1944 — மறைவு 24.03.2024

யாழ்ப்பாணம் சாவகச்சேரி கிராம்புவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று முன்தினம் (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் சிவஞானசுந்தரம் (றெயின்போ டிஜிற்றல் விஷன்), அமிர்தானந்தசிவம் (லண்டன்), அமிர்தலதா, முருகானந்தம் (UK), அமிர்தநாயகி (பிரான்ஸ்), சதானந்தம் (கலைமகள் டிஜிற்றல் விஷன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மிருதுபாசினி, வனிதா (UK), காலஞ்சென்ற பரராஜசேகரம், விமலசசி (UK), தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிரோஷன் (ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பவித்திரா (மாணவி - பேராதனைப் பல்கலைக்கழகம்), நிவேதனன் (மாணவன் - BCAS Campus), கஜானி (பிரான்ஸ்), கஜானன், கஜான், சஜிந் (லண்டன்), சன்ஜித் (லண்டன்), யதுர்சன் (பிரான்ஸ்), நிதுர்ஷா (பிரான்ஸ்), யனுஷா (பிரான்ஸ்), டிஷாந் (UK), அஸ்வினி (UK) பிரிதா, சர்ஜனா, சுஜித்தா, முகுந்தன் (பிரான்ஸ்), நிதர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆதிக்ஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1ம் கட்டை வீதி, கிராம்புவில்,
டச்சு றோட் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
(239)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## திரு. வ.மனோகரராசா

பிறப்பு : 14.05.1952
இறப்பு : 06.04.2023


எனது ஆருயிர் தெய்வமே!
அன்பின் உறைவிடமே
என்றும் அன்று பூத்த மலரைப் போல வாடாமல் ஜொலிப்பவரே
குழந்தைகள் மீதும் ஏழைகள் மீதும்
மிக்க கருணை உள்ளம் கொண்டவரே
எல்லோரையும் பாச மழையில் நனைப்பவரே
அக்கா பிள்ளைகள் மீதும் ஓருயிராய் இருப்பவரே
விதியின் கரங்களிலே விரைந்து சென்று விட்டீர்
அழுது இலாபமென்ன ஆவி துடிக்கிறதே
உங்களது ஆன்மா இறைவனின் பாதத்தில்
சாந்தியடைய குல தெய்வங்களை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூன்று கோயிலடி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

அன்பு மனைவி மற்றும்
குடும்பத்தினர்.
(201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பஞ்ச ராஜகோபுர சகித புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகப் பெருவிழா நேற்று திங்கட்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# மைத்திரி உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் சட்டத்தரணிகள் பகிரங்கம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைது செய்வதற்கு போதுமான காரணங்கள் உள்ளன என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் குற்றவியல் நடைமுறைச்சட்டம், தண்டனை சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளிட்டவற்றின் விதிகளை மீறியுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள சட்டத்தரணிகள் ஏன் அவர் இந்த முக்கியமான விடயத்தை மறைத்து வைத்தார் என கேள்வி எழுப் பியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

சிஐடியினரும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினரும் உடனடியாக நடவடிக்கை எடு க்காவிட்டால் சட்டமா அதிபரும் சிஐடி யினரும் மைத்திரி பாலசிறிசேனவின் கூற்றுக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரும் மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயார் என சட்டத்தரணி மனோஜ் நாண யக்கார தெரிவித்துள்ளார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ் மைத் திரிபால சிறிசேன குற்றம் செய்துள்ளார். அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும்.

விசாரணை செய்ய வேண்டும் என உண்மை மற்றும் நீதிக்கான சட்டத் தரணிகள் அமைப்பின் சட்டத்தரணி அமில உடவத்த தெரி வித்துள்ளார். சிறிசேன குற்றமிழைத்துள்ளார் அவரை உடனடியாக கைது செய்து தடுத்து வைத்து விசாரணை செய்யலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க குவைத் தீர்மானம்

(குவைத்)

குவைத்தில் வதிவிட விசா காலத்தை மீறி நாட்டில் தங் கியிருந்து பணியிடங்களை விட்டு வெளியேறிய இலங் கையர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க குவைத் அமைச்சர் எமிர் ஷேக் மெஷல் அல் அஹ மட் அல் ஜாபர் தீர்மானித்து ள்ளார்.

குவைத் எமிர் ஷேக் மெஷால் அல்-அஹமட் அல்-ஜாபர் மற்றும் குவைத்து க்கான இலங்கைத் தூதுவர் காண்டீபன் பாலசுப்ரமணியம் அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித் துள்ளார்.

இதன்படி நாட்டிலுள்ள இலங் கையர்களுக்கு அபராதம் அல்லது சட்டத்தடைகள் எதுவும் செலுத்தாமல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது

இந்த பொதுமன்னிப்புக் காலம் கடந்த 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும். (நி-5)





ஒளிமயமான எதிர்காலத்திற்கான ஞானத்தை வழங்கிடுவோம்...

அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் நெறியாள்கையில் ஒளிமயமான எதிர்காலத்திற்கான முதல் படி.

வாழ்க்கைக்கு ஒளியூட்டும் அபிவிருத்தி லொத்தர் சபையின் பங்களிப்புடன் வருங்கால சந்ததியினதும் நாட்டினதும் எதிர்காலத்தினை பிரகாசிக்கச் செய்யும் வகையில் நாட்டின் சகல பாடசாலைகளிலும் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக 2024/2025 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

(C-2262)

இறுதி நாள் - 2024.04.01

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபரிடம் சமர்ப்பியுங்கள்.

உதவித்தொகைக்கான விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்வதற்கு

www.facebook.com/president.fund
www.presidentsfund.gov.lk

“சவால்களை கண்டு பயந்து ஓடாமல், சுயமான கொள்கைகளுடன் முன்னோக்கி நகர்ந்து செல்வதற்கான சக்தியை கல்வி மூலம் நம் நாட்டின் மாணவ செல்வங்களுக்கு வழங்க வேண்டும்.”

- அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

www.dlb.lk

அபிவிருத்தி லொத்தர் சபை


# பால் தேநீர் விலையை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலைகளை நேற்று முன்தினம் முதல் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி பால் தேநீரின் விலையையும் குறைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறைக்கப்பட்ட பால்மா விலை சந்தைக்கு வந்ததன் பின்னர் திருத்தம் மேற் கொள்ளப்படும் என அதன் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் அத்தியாயம் ஒன்று மெல்லச் சரிந்தது



## அமரர் வி.கே.சண்முகலிங்கம் (சண்)

**(முன்னாள் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகின் இடை வரவு விரிவுரையாளர்)**

வடமாகாணத்தின் பிரபல்யமான துடுப்பாட்ட வீரராகவும் பயிற்றுனராகவும் இருந்து மாணவர்களின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து காலநேரம் பாராது பணி செய்த திரு.வி.கே. சண்முகலிங்கம் அவர்களின் பிரிவுச்செய்தி ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அமரர் வி.கே. சண்முகலிங்கம் ஆசிரியர் அவர்கள் துடுப்பாட்டத்தினை ஆழமாக நேசித்த அன்பான ஆசிரியர். விளையாட்டுத் துறையின் ஊடாக மாணவர்களிடையே நல்லொழுக்கத்தினையும் நற்பண்புகளையும் புகட்டியதுடன் வெற்றி தோல்விகளினை சமமாக ஏற்று எல்லோரையும் மதித்து நடக்கும் மனப்பக்குவத்தினையும் மாணவர்களிடையே உருவாக்கியவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகின் ஆரம்ப காலத்தில் இடைவரவு விரிவுரையாளராகவும் பயிற்றுனராகவும் கடமையாற்றிய காலங்களில் உடற்கல்வி விஞ்ஞான அலகின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியிருந்தவர்.

காலம் தவறாத தன்மையும், நேர்மையும், ஒழுக்கமும் மேலோங்கிக் காணப்பட்ட அற்புதமான ஒரு ஆசிரியனை, பயிற்றுவிப்பாளனை, விளையாட்டு வீரனை இன்று வடமாகாண மாணவர் சமூகம் இழந்து நிற்கிறது.

முற்றிய கதிர் ஒன்று சாய்ந்துவிட்ட இந்த துயரமான சூழலில் விளையாட்டுத்துறையின் வழிகாட்டியாக இருந்து மாணவர்களின் வளர்ச்சிக்காக அளப்பெரும் பணிகளைச் செய்த அமரர் வி. கே. சண்முகலிங்கம் அவர்களுடைய ஆத்மா அமைதியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சார்பாகவும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி கற்கைநெறியின் முதலாம் அணி மாணவர்கள் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்கள்,**
**யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான**
**முதலாம் அணி மாணவர்கள் சார்பாக**
**நாகராஜா விஜயகுமார் (சுவிற்சர்லாந்து)**

(247)

# 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்

தோற்றம்
05.03.1952

மறைவு
26.03.2005

ஆண்டுகள் பத்தொன்பது நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்!
எம் உயர்வுக்கு உன்னத வழிகாட்டி
வாழ்வை அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

**மயூரன்ஸ் ஜுவல்லர்ஸ்**
**95, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும்...**
**குடும்பத்தினர்**

**எஸ்.எஸ்.மொபைல்ஸ்**
**(சந்திரலிங்கம் சறோஜினிதேவி)**
**65, சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.**

(249)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்டி சுற்றுலா கடற்கரையினை தூய்மைப்படுத்தும் நிகழ்வு முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

சர்வதேச பூச்சிய கழிவு தினத்தினை முன்னிட்டு சாட்டி சுற்றுலா கடற்கரையினை தூய்மைப்படுத்தும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமார், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச சபை செயலாளர் தி.தியாகச்சந்திரன் கலந்து கொண்டதோடு பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5)



# பீஜிங் சென்றடைந்தார் பிரதமர்



(பீஜிங்)

பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று சீனாவின் பீஜிங் நகரை சென்றடைந்தார்.

சீனாவின் வெளியுறவுத் துறை நிறைவேற்று துணை அமைச்சர் சன் வெய்டாங் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பதில் கடமைத் தூதுவர் கே.கே. யோகானந்தன் ஆகியோர் பிரதமரை வரவேற்றனர்.

சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் சீனாவின் முன்னணி வருடாந்த சர்வதேச மாநாடான போவா மாநாட்டின் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன பீஜிங் பயணமானமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

காசா பகுதி மற்றும் உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே நிலவும் மோதல்களின் விளைவாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று பிரன்ட் கச்சா எண்ணெய் பேரல் ஒன்று 85.82 டொலர்களாகவும் அமெரிக்க W.T.I கச்சா எண்ணெய்யின் விலை 81.4 டொலர்களாகவும் பதிவாகியுள்ளது. இதேவேளை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்குப் பிறகு கச்சா எண்ணெய்யின் விலை இவ்வாறு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# போக்குவரத்து நெருக்கடியால் கற்றல் செயற்பாடு பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் கிராமத்தில் இருந்து கற்சிலைமடு மகா வித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் இருந்து சுமார் 75 வரையான மாணவர்கள் பாடசாலைக்கு சென்று வரும் நிலையில் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்து பாடசாலை நேரத்தில் வருகை தராததன் காரணமாக மாணவர்கள் நீண்ட நேரம் வீதியில் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மன்னாகண்டல் சந்தியில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் கற்சிலைமடு மகா வித்தியாலயம் உள்ளது. 12 கிலோமீற்றர் தூரத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி உள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதேச மாணவர்களின் நலன் கருதி இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையில் ஈடுபட வேண்டும் என கடந்த 14 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்ற போதிலும் அவை நடைபெறவில்லை.

இதன் காரணமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் வெளியிட்டனர். (நி-5-30)

# சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக வளாகத்தில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம் திருமதி. ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.சி.தேவரஞ்சினி, கௌரவ விருந்தினராக தடகள வீராங்கனை திருமதி. சிறி செயானந்தபவன் அகிலத்திருநாயகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5)

# இராசிபலன்

26.03.2024
பங்குனி 13, செவ்வாய்க்கிழமை
பிரதமை பிற்பகல் 2.51 மணிவரை

அத்தம் பிற்பகல் 1.28 மணிவரை
சுபநேரம் -10.44-12-14 மணிவரை
இராகுகாலம்-3.14-4.44 மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

வளவன்




புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய் தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகும்.




பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.




செய்தொழிலை விருத்தி செய்ய எதிர்பார்த்த ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.




எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.




வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொன்னான நாள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப பொறுப்புக்கள் சற்று அதிகரிக்கும், உடல் நலன் சீராகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.




நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

நேரத்தை சரியாகப் பயன்படுத்தாதவன் எண்ணியதை ஒரு நாளும் அடைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுடன் கைதான மூவரையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை

## ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட கடற்படையைச் சேர்ந்த இருவரையும் கஞ்சாவை வாங்க வந்த நபரையும் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை கஞ்சா விற்பனை நடைபெறுவதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விற்பனையில் ஈடுபட்ட இருவரையும் அதனை வாங்கிய நபரையும் கைது செய்து, பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட இருவரும் கடற்படையைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றைய நபர் ஊரவர் எனவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் மூவரையும் முற்படுத்தி மூவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அதனால் அவர்களை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வேண்டும் என கோரி இருந்தனர்.

பொலிஸாரின்கோரிக்கையை ஏற்ற மன்று மூவரையும் 48 மணி நேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதித்தது. (நி-5-33)



கைதடி தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை "பெண்ணின் பலம் நாட்டின் முன்னேற்றம்" எனும் தொனிப்பொருளில் கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கில் இடம்பெற்றது. செல்வி ம.டஸ்னி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.லலிதசங்கர் கலந்து சிறப்பித்திருந்தார். (படம்-சுபேசன்)

# வட்டு இளைஞன் படுகொலை

## மேலும் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இளைஞனை கடத்தி படுகொலை செய்த குற்றச் சாட்டில், பிரதான சந்தேக நபர் களில் ஒருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி காரைநகர் பகுதிக்கு சென்று விட்டு மனைவியுடன், மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞனை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வன்முறை கும்பல் ஒன்றினால் தம்பதியினர் வாகனத்தில் கடத்தி செல்லப்பட்டு, இளைஞனை சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகொலை செய்த கும்பல், மனைவியை சித்தன் கேணி பகுதியில் இறக்கி விட்டு தப்பிச் சென்று இருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஏற்கனவே ஆறு பேரை கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் அடையாள அணிவகுப்பின் போது கொல்லப்பட்ட இளைஞனின் மனைவியால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் வவுனியா, ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் தலைமறைவாகி இருந்த பிரதான நபர்களில் ஒருவர் உள்ளிட்ட மூவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை சந்தேக நபர்களுக்கு அடைக்கலம் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.

தேடப்படும் சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது சிறைத்தண்டனைக்கு உரிய குற்றமாகும்.

எனவே வட்டுக் கோட்டை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாக்கும் நபர்கள் சந்தேகநபர்கள் குறித்து பொலி ஸாருக்கு அறியத் தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (நி-5-33)

# கனடா அனுப்புவதாக கூறி பணமோசடி

## யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் தன்னை ஊடகவியலாளராக அடையாளப்படுத்திக் கொண்டு கனடா அனுப்புவதாக கூறி மோசடியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் கனடாவில் தென்னிந்திய இசையமைப்பாளரின் மாபெரும் இசை நிகழ்வொன்று இடம் பெறவுள்ளதாகவும் அதற்காக இலங்கையில் இருந்து சில ஊடகவியலாளர்களை அழைத்துச்செல்ல உள்ளதாகவும் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அழைத்து செல்லப்படவுள்ள ஊடகவியலாளர்களுடன் ஊடகவியலாளராக உங்களையும் அழைத்து சென்று கனடாவில் இறக்கி விடுவதாக யாழ்ப்பாண இளைஞன் ஒருவரிடம் கூறியுள்ளார்.

அதற்காக சிலருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதோடு ஊடக நிறுவனம் ஒன்றிடம் இருந்து ஊடகவியலாளர் என அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள, அந் நிறுவனத்திற்கு ஒரு தொகை பணம் வழங்க வேண்டும் என இளைஞனிடம் இருந்து 43 இலட்ச ரூபாய் பணத்தினை பெற்று இளைஞனுக்கு ஊடக நிறுவனம் ஒன்றின் அடையாள அட்டையையும் வழங்கியுள்ளார்.

பணத்தினை பெற்று நீண்ட காலமாகியும் கனடாவில் இசை நிகழ்வுக்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறுவதாக இளைஞன் அறியாத நிலையில் தனது பணத்தினை மீள தருமாறு கோரிய வேளை இளைஞனின் தொடர்பை துண்டித்துள்ளார்.

இதனால் இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, சந்தேக நபர் வவுனியாவில் தலைமறைவாக இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

அதேவேளை, இளைஞனுக்கு வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை அந்த ஊடக நிறுவனத்தினை மோசடி செய்த நபரே நடத்தி வந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், பொலிஸாரின் தீவிர விசாரணைகளை அடுத்து தலைமறைவாகி இருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த நபர் பல்வேறு மோசடி சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

(60000-3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 160 | 150-180 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 250 | 250 | 300 |
| தக்காளி | 140 | 100 | 150 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 150 | 100-140 | 200 |
| கோவா | 300 | 280 | 350 | 350 | 350 |
| கரட் | 300 | 450 | 450 | 400 | 500 |
| பூசணி | 180 | 180 | 160 | 120-150 | 200 |
| புடோல் | 150 | 150 | 200 | 120 | 120 |
| வாழைக்காய் | 150 | 160 | 160 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 350 | 200-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 600 | 550 | 550 | 480 | 600 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 350-400 | 300 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 120-180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 300-400 | 300 |
| லீக்ஸ் | 300 | 350 | 380 | 280 | 400 |
| பீற்றூட் | 300 | 200 | 350 | 250 | 300 |
| கறிமிளகாய் | 400 | 150 | 400 | 300-350 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 600 | 400-800 | 1000 |
| போஞ்சி | 300 | 250 | 300 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 160 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 60 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 100-180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 350 | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 120 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 160 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| [illegible] | 100 | [illegible] | 100 | 80 | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பை உறுதி செய்யக்கோரி

# இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களால்

# நேற்று போராட்டம் முன்னெடுப்பு






(யாழ்ப்பாணம்) இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யக்கோரி யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீடத்தில் இருந்து ஆரம்பித்த பேரணி பலாலி வீதி ஊடாக பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் வரை இடம்பெற்று அங்கு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலைவாய்ப்பில் அசமந்தமான போக்கினை உடன் நிறுத்தி, தரமான சேவையை மக்களுக்கு வழங்க, இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குமாறு கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இணைந்த சுகாதார கற்கைகள் பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-33)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1991 - இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 58
உயரம்: 6
தகைமை/தொழில்: Engineer(Holand)
எதிர்பார்ப்பு: Engineer, Doctor, IT Professional, சைவபோசனம்
தொ.இ: B/14336

பிறப்பு:1988 -இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: -
உயரம்:5' 9"
தகைமை/தொழில்- O/L. கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14339

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: -
உயரம் :5' 6"
தகைமை/தொழில்: O/L.கடை
எதிர்பார்ப்பு- தகுதியான பெண்
தொ.இ: B/14340

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:22 1/4
உயரம்: 5' 10"
தகைமை/தொழில்:- Bsc (Software Engineering), Software Engineer
எதிர்பார்ப்பு: Qualified Engineer
தொ.இ: B/14341

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1995 -இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா-51 1/4
உயரம் : 5' 4"
தகைமை/தொழில்:Degree(Canada).வங்கி
எதிர்பார்ப்பு: பட்டதாரி (கனடா)
தொ.இ: G/14254

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: -
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: Bsc(Follwing)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14255

பிறப்பு -1997 - இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: -
உயரம்:
தகைமை/தொழில்: BA,Nursing(Chennai)
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: G/14259

பிறப்பு: 1993 -இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 70 1/2
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: BSC(IT),IT Supervisor
எதிர்பார்ப்பு: தகுதியானவர்
தொ.இ: G/14261

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பேராசிரியர்.செ.சிவஞானசுந்தரம் நினைவுப்பேருரை-2024**

பேருரைத் தலைப்பு:

"ஈழத்துத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புகள்: ஆழமும் விரிவும் தேடி"

பேருரை வழங்குநர்:

திரு.ஈஸ்வரநாதபிள்ளை குமரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
கலைப் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 27.03.2024 (புதன்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : ஹூவர் கலையரங்கம்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்.
(C-00008)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரேசிலில் புயலால் 25 பேர் உயிரிழப்பு



(பிரேசிலியா)

தென் அமெரிக்க நாடான பிரேசில் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் கடந்த சனிக்கிழமை கடுமையான புயல் தாக்கியதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக ரியோ டி ஜெனிரோவின் மலைப்பகுதிகளில் புயலின் தாக்கம் அதிகமாக இருந்தது. புயல் காரணமாக தொடர்ந்து கனமழை பெய்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

புயல் மழை தொடர்பான விபத்துக்களில் இதுவரை 25 பேர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். வீடுகளை இழந்து தவிக்கும் மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிரேசிலில் கடந்த சில தினங்களாக கடும் வெயில் வாட்டி வதைத்தது. அதிகபட்சமாக 62 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

இந்த வெப்ப அலையைத் தொடர்ந்து திடீரென புயல் தாக்கியிருக்கிறது. காலநிலை மாற்றத்தால் இந்த வானிலை மாற்றம் நிகழ்ந்திருக்கலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

## இந்தியாவுடனான ...

## விருப்பம் தெரிவி...

(இஸ்லாமாபாத்)

**இந்தியாவுடன் கடந்த 2019 ஆம் ஆண்டு ஓ... முதல் தடைப்பட்டுள்ள வர்த்தக உறவை மீட்... பாகிஸ்தான் தீவிரமாக பரிசீலித்து வருக... அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் முகமது... தெரிவித்துள்ளார்.**

கடன் நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானில், அந்நாட்டு வர்த்தகர்களும் பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தியாவுடனான வர்த்தக உறவை மீண்டும் தொடருவதற்கு பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது. லண்டனில்நடைபெற்ற அணுசக்தி மாநாட்டில் பங்கேற்ற பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது ஐசக் தார் இது குறித்து தெரிவிக்கையில்,

"பாகிஸ்தான் தொழிலதிபர்கள் இந்தியாவுடன் வர்த்தகத்தை மீண்டும் தொடர வேண்டும் என்று விரும்புகின்றனர். அதன் காரணமாக இந்தியாவுடனான வர்த்தக உறவை மீட்டெடுப்பது குறித்து பாகிஸ்தான் தீவிரமாக பரிசீலித்து வருகிறது" என குறிப்பிட்டார்.

2019 பெப்ரவரியில் புல்வாமா பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப்

## பாலைவன குழியொன்றிலிருந்து 65 சடலங்கள் மீட்பு-லிபியாவில் சோகம்

(திரிபோலி)

தென்மேற்கு லிபியாவின் பாலைவனப்பகுதியில் ஒரே குழியினுள் அடக்கம் செய்யப்பட்ட 65 புலம் பெயர் மக்களின் உடல்கள் மீட்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த தகவலை ஐக்கிய நாடுகள் சபையின் இடம் பெயர்வு நிறுவனம் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது.



அவர்களின் இறப்புக்கான காரணம் மற்றும் அவர்கள் எந்த நாட்டினர் என்பது தொடர்பான தரவுகள் எதுவும் இல்லை என்றும் ஆனால் அவர்கள் பாலைவனத்தின் வழியாக மத்திய தரைக்கடலை நோக்கி கடத்தப்பட்ட நிலையில் இறந்திருக்கலாம் என்றே நம்புவதாக குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பு IOM தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடுகையில்,

ஒரே கல்லறையில் 65 உடல்களை அடக்கம் செய்துள்ள சம்பவம் உண்மையில் அதிர்ச்சியாக உள்ளது என தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து லிபியா அரசாங்கம் விசாரணை முன்னெடுத்துள்ளது.

இந்த புதைகுழியானது லிபியா திரிபோலிக்கு தெற்கே உள்ள அல்-ஷுவைரிஃப் நகரில் உள்ள அல்-ஜஹ்ரியா பள்ளத்தாக்கில் கண்டு பிடிக்கப்பட்டது.

மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவிற்குள் நுழைய முயலும் புலம் பெயர் மக்களுக்கு இலகுவான இடங்களில் ஒன்றாக லிபியா உள்ளது.

தற்போது மீட்கப்பட்ட உடல்களை உரியவர்களிடம் ஒப்படைக்க போதுமான தரவுகளை சேகரிக்க இருப்பதாக IOM அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-5)


## வான்வழியில் நு... ரஷ்யாவை குற்றம் ...

(வார்சா)

ரஷ்யா ஏவிய ஏவுகணை போலந்து நாட்டின் வான் வழியில் நுழைந்ததாக போலந்து குற்றம் சாட்டியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா வலுக்கட்டாயமாக தாக்கல் நடத்தத் தொடங்கியது. இந்த தாக்குதல் போராக மாறியது. இரு நாடுகளுக்கும் இடையிலான போர் இரண்டு ஆண்டுகளை தாண்டியும் நடைபெற்று வருகிறது. தற்போது உக்ரைன் எதிர்த் தாக்குதல் யுக்தியை பயன்படுத்தி வருகிறது. இதனால் ரஷ்யாவுக்கு அதிகபடியாக சேதம் ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் தாக்குதலுக்கு



ரஷ்யா பதிலடி கொடுத்து வருகிறது. கடந்த நான்கு நாட்களில் மூன்று மிகப்பெரிய ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

## மொஸ்கோ தாக்குதலை... பிரான்ஸின் அதிர...

(பாரிஸ்)

மொஸ்கோ மீதான தாக்குதலை தொடர்ந்து பிரான்ஸ் அரசாங்கம் தனது பயங்கரவாத எச்சரிக்கையை உயர்த்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸ் பிரதமர் கேப்ரியல் அட்டல் நேற்று முன்தினம் ஜனாதிபதி இம்மானுவல் மெக்ரோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ம வர்த்தக உறவிற்கு
# ...வித்த பாகிஸ்தான்

**...டு ஓகஸ்ட் மாதம் ...மீட்டெடுப்பதற்கு ...வருகிறது என ...மது ஐசக் தார்**




இந் வெ ன் து" மா டர் க்கு துப்

பொருட்களுக்கும் சுங்க வரியை 200 சதவீதம் அளவுக்கு இந்தியா உயர்த்தியது.

இதன் காரணமாக இரு நாடு களிடையேயான வர்த்தக உறவு பாதிக்கப்பட்டது. அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஜம்மு-காஷ்மீ ருக்கு சிறப்பு அந்தஸ்தை இந்தியா ரத்து செய்ததை அடுத்து, இந்தியாவுட னான வர்த்தக உறவை பாகி ஸ்தான் முழுமையாக நிறுத் திக்கொண்டது.

வர்த்தக உறவு பாதிக்கப் பட்டபோதும் இரு நாடுகளி டையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. இந்த நிலையில், அண்மை யில் அந்நாட்டு பிரதமராக இர ண்டாவது முறையாக பதவி யேற்ற ஷெபாஸ் ஷெரீஃபுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார். அதற்க ஷெபாஸ் ஷெரீஃப் நன்றி தெரிவித்தார் இரு நாடுகளுக்கு இடையே யான உறவு மீண்டும் மேம் படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. (நி-5)

# உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்



(கீவ்)

உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா வான்வழித் தாக்கு தல் நடத்தியுள்ளதாக செய் திகள் வெளியாகியுள்ளது.


தாக்குதலின் போது எச்சரி க்கை ஒலி எழுப்பப்பட்ட நிலையில் மக்கள் தங்கள் வீடுகளுக்கு கீழுள்ள பதுங்கு அறைகளில் அடைந்து தங் களைப் பாதுகாத்துக் கொண்டு ள்ளனர்.

இந்நிலையில், ரஷ்யா ஏவிய 18 ஏவுகணைகள் மற்றும் 25 ஆளில்லா விமா னங்களை உக்ரைன் வான் தடுப்பு மையங்களின் மூலம் தடுத்து அழித்துள்ளது.

அதேவேளை ரஷ்யா வின் இந்த தாக்குதல் முறிய டிக்கப்பட்டமையால் உக்ரை னில் சிறிதளவே சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு விமானப்படை அறிவித்துள் ளது.

எனினும் ரஷ்யாவின் பெரிய தரையிறங்கும் கப்பல் களான யமல் மற்றும் அசோவ், ஒரு தகவல் தொடர்பு மையம் மற்றும் பல்வேறு உட்கட்ட மைப்பு வசதிகள், ஆகியவ ற்றை உக்ரைன் நேற்று முன்தினம் தாக்கியழித்துள் ளது. (நி-5)

# ...நுழைந்த ஏவுகணை ...ம் சாட்டிய போலந்து



...கி ...ில் ...கள் ...து.

மேலும் உக்ரைன் தலைநகர் கீவ் நகரையும் குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் மிக அரு கில் உள்ளது போலந்து. உக்ரைனை குறிவைத்து ரஷ்யா ஏவும் ஏவுகணைகள் சில நேரத்தில் போலந்து வான்வழிக்கு செல்வது உண்டு.

அப்படி கடந்த சில நாட்க ளில் ஏவிய ஏவுகணைகள் ஒன்று போலந்து நாட்டின் வான்வழியில் நுழைந்ததாக போலந்து குற்றம் சாட்டி யுள்ளது.

மேலும் உடனடியாக இது தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என போலந்து வலியுறுத்தியுள்ளது. மேலும், எஃப்16 போர் விமானத்தை செயற்படுத்த நேட்டோ உறுப் பினர் நாட்டை தூண்டுகிறது எனவும் எச்சரித்துள்ளது.(நி-5)

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேபாளத்தில் ஹோலி பண்டிகை

(காத்மண்டு)

நேபாளம் தலை நகர் காத்மண்டு மற்றும் நாடு முழுவதும் உள்ள மலை ப்பாங்கான மாவட்டங்களில் பலத்த பாதுகாப்புக்கு மத்தி யில் வண்ணங்களின் திரு விழாவான ஹோலி பண் டிகை நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள அனை த்து நேபாள மக்களுக்கும் மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்புக்கான தனது நல்வா ழ்த்துக்களை தெரிவித்த ஜனாதிபதி பௌடெல், ஹோலி பண்டிகையை அநீ திக்கு எதிரான நீதியின் வெற்றி மற்றும் தீமைக்கு எதிரான அறத்தின் வெற்றி



கொண்டாட்டம் என்று விவ ரித்தார்.

அசம்பாவிதம் ஏதும் ஏற் படாமல் இருக்க காத்மண்டு பள்ளத்தாக்கு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேபாள பொலிஸார் பாது காப்பை தீவிரப்படுத்தியுள்ள னர்.

சட்ட ஒழுங்கை பாதுகா க்க பள்ளத்தாக்கில் சுமார் 5,000 பொலிஸார் குவிக்கப் பட்டனர்.

பதற்றமான பகுதிகளில் பாதுகாப்பு நிலைமையை கண்காணிக்க ட்ரோன்களை யும் பொலிஸார் பயன்படுத்தி யுள்ளனர். (நி-5)

# ...லை தொடர்ந்து ...ிரெடி நகர்வு

...டக ...ன. ...பல் ...னா ...ன்

மற்றும் மூத்த பாதுகாப்பு அதிகாரி களுடனான சந்திப்பிற்குப் பிறகு இந்த விடயத்தை அறிவித்துள் ளார்.

பிரான்ஸின் பயங்கரவாத எச்சரி க்கை அமைப்பு மூன்று நிலை களைக்கொண்டுள்ளது. அதன் படி, பிரான்ஸில் அல்லது வெளிநாட்டில் ஒரு தாக்குதல் நடைபெற்றால் அல்லது அச்சுறு த்தல் விடுக்கப்படும் போது மிக உயர்ந்த நிலை எச்சரி க்கை செயற்படுத்தப்படுகிறது.

அத்தோடு, தொடருந்து நிலையங்கள், விமான நிலை யங்கள் மற்றும் முக்கியமா டுத் தலங்கள் போன்ற பொது இடங்களில் ஆயுதப்படைக ளின் தீவிர ரோந்து போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை இது அனுமதிக்கிறது.

இந்நிலையில், மொஸ்கோ வில் நடத்தப்பட்ட பயங்கர வாத தாக்குதலுக்கு பிரான்ஸ் கடும் கண்டனம் வெளியி ட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மீண்டும் பணிக்கு -கல்வியமைச்சு

(கொழும்பு)

ஆங்கில வழி ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஓய்வு பெற்ற ஆங்கில வழி ஆசிரியர்களை மூன்று வருட காலத்திற்கு இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த ஆசிரியர்கள் தரம் ஆறு முதல் தரம் பதினொன்று வரையான வகுப்புகளுக்கு உள்வாங்கப்பட உள்ளதுடன் தேவைகள் தொடர்பாக அனைத்து மாகாணங்களிலிருந்தும் தகவல் அறிய அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

தேசிய பாடசாலைகள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

தகவல் கிடைத்தவுடன் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். (நி-5)

# மதுவரி திணைக்களத்தின் வரி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மதுவரி திணைக்களத்தின் வரி வருமானம் அதிகரித்துள்ளதாக அதன் ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 38.5 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் மதுபானத்தின் விலை அதிகரிப்பு காரணமாக, கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் மது உற்பத்தி குறைவடைந்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மது உற்பத்தி 657,000 லீற்றர் அளவில் குறைந்துள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் சட்டவிரோத மதுபானம் தொடர்பான சுற்றிவளைப்புகளை மேற்கொள்ள நாடளாவிய ரீதியில் விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அடுத்த ஜனாதிபதி ரணிலே மனுஷ நாணயக்கார உறுதி

(கொழும்பு)



இலங்கையில் தற்போது இருக்கும் மூத்த அரசியல் தலைவர்களில் சகல மக்களினதும் மனதை வென்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விளங்குவதோடு அவர்தான் அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் காலம் நெருங்கும் வேளையில் சிலர் பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றார்கள். அவர்கள் என்ன நோக்கத்துக்காக அப்படிச் சொல்கின்றார்கள் என்று தெரியவில்லை.

ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி நடைபோடும். எமது கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாகவும் வருவார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பு வேட்பாளர் இல்லாமல் பொது வேட்பாளராகவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடச் சந்தர்ப்பம் உண்டு. அவர் எந்த வழியில் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே பெருமை. எமது கட்சிக்கு நாள்தோறும் மக்களின் ஆதரவு அதிகரித்து வருகின்றது.

அதேவேளை, ஜனாதிபதிக்கு மூவின மக்களின் ஆதரவும் பெருகி வருகின்றது என் றும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# விசேட நடவடிக்கையின் போது 841 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாட்டில் பொலிஸாரினால் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது நேற்று 841 ஆண் சந்தேக நபர்களும் 21 பெண் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 57 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு ,5 சந்தேக நபர்களின் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு போதைப் பொருளுக்கு அடிமையாகிய 10 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், பொலிஸாரினால் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது ஹெரோயின் 142 கிராம் , ஐஸ் போதைப் பொருள் 97 கிராம் , கஞ்சா 395 கிராம் போன்ற போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் போதும் 76 ஆண் சந்தேக நபர்களும் , 3 பெண் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இன்று ஒரு தகவல் 76



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வளரும் உறுப்புகள்

இந்த உலகத்தில் பல்லியாக பிறந்து இருக்கலாம்...... பாவம் மனிதனாகப் பிறந்து விட்டேனே! என்று கவலைப்பட்டுக் கொண்டு வந்தார் ஒருதர்.

ஏனுங்க ஒரே அடியாக இப்படி சலித்து கொள்ளுகிறீர்கள் என்றேன். பின்ன என் சேர் இதோ பாருங்கள் எனது கையை என்று காட்டினார். பார்த்தால் விரலில் ஏதோ கட்டுப் போட்டு இருந்தார். ஏன்.. எங்கயாவது தவில் வாசிக்கப் போறிங்களோ என்றேன்.

என் வயித்தெரிச்சலை கிளப்பாதீங்க சார்! நான் ஏற்கனவே நொந்து போயிருக்கேன். என் விரலும் நொந்து போயிருக்குது என்றார்.

விரலுக்கு என்ன ஆச்சு சொல்லுங்கள் என்றேன். கதவு இடுக்கிலே கையை வைத்து விடடேன்! கதவு பத்திரமாக இருக்கின்றது. விரல் நசுங்கிப் போயிருக்கு என்றார். வெறுமனே கதவு இடுக்கிலே கையை வைத்து விட்டேன் அது நசுங்கிப் போய் விடுமா என்றேன். ஒரு கையை கதவு இடுக்கிலே வைத்தேன்! அது ஞாபகம் இல்லாமல் இன்னொரு கையால சாத்தினேன். வலிச்சுக்கு அப்புறம்தான் தெரிந்தது. இன்னொரு கை அங்கே இருக்கிற விடயம் என்று சொன்னார்.

அது சரி இப்ப எப்படி இருக்கு நிலைமை என்றேன். வைத்தியரிடம் போனேன். படம் எல்லாம் எடுத்துப் பார்த்தார். இப்போது கேடு வந்துள்ளது என்றார். யாருக்கு என்றேன் அதிர்ச்சியுடன். விரலுக்குத்தான். இந்த விரலை சேர்த்துக்கறதா விட்டுடலாமா என்று அப்புறம் முடிவு பண்ணாலம் என்றார்.

அது இருக்கட்டும். இந்த உலகத்தில பல்லியா பிறந்து இருக்கலாம் என்று புலம்பிக் கொண்டு வந்தீர்கள் அது எதற்காக என்று கேட்டேன்.

அதே கதவிலே ஒரு பல்லி அடிக்கடி வாலைக் கொடுத்துவிடும். அப்போது எல்லாம் கதவு இடுக்கிலே சிக்கி வால் துண்டாகி விடுகிறது. ஆனால் பாருங்கள் அதே பல்லிக்கு வால் மறுபடியும் முளைக்கிறது.

ஆனால் என் நிலைமையைப் பாருங்கள். இந்த விரலை எடுத்து விட்டால் மறுபடியும் முளைக்குமா? போனது போனது தானே! அதுக்கப்புறம் நான் நாலு் விரலோட நடமாட வேண்டியது தானே!

ஏன் சேர் பல்லியோட வாலை விட மனுஷனோட விரல் மட்டமாப் போய் விட்டதா சார்! அவரோட கஷ்டம் அவருக்கு. அதனால் அவர் பாட்டுக்கு புலம்பிக் கொண்டு இருக்கிறார். அவர் ஒரு பக்கம் புலம்பிக்கொண்டே இருக்கட்டும். அதற்கு இடையில் நான் உங்களுக்கு ஒரு தகவலை சொல்லிவிடுகிறேன்.

மனித உறுப்புக்கள் துண்டிக்கப்பட்டால் அது மறுபடியும் வளருதில்லை. ஆனால் மரக்கிளையை வெட்டினால் அது மறுபடியும் வளர்ந்திடுது!

நம்மிடம் இல்லாதது அதனிடம் அப்படி என்ன அதிகபடியாக இருக்கிறது! தாவரங்கள் வளருவதற்கு காரணமாக இருக்கிறது மெரிஸ்டம் என்கிற செல்கள். நாம் கிளையை வெட்டினாலும் சரி இலையைக் கிள்ளினாலும் சரி இந்த மெரிஸ்டம் செல்கள் சும்மா இருக்காது! உடனே வளர ஆரம்பிக்கும். அப்படி வளர்ந்து புதுக்கிளையை உண்டாக்கும். புதிய இலையை உண்டாக்கும்!

நமது உடம்பில் அது மாதிரி மெரிஸ்டம் செல் இல்லை! அதனாலே கை கால் போல் மறுபடியும் வளர்கிற அதிஷ்டமும் இல்லை!

பல்லி, மண்புழு இதுமாதிரி சில விலங்கினங்களுக்கு இந்த செல் இருக்குது. அதனாலே தான் பல்லி கவலைப்படாமல் கதவு இடுக்கிலே கொண்டு போய் வாலை வைக்கிறது. வால் துண்டாப் போனாலும் செயற்கை வால் எங்கே கிடைக்கும் என்று தேடிக் கொண்டு போக வேண்டிய அவசியம் அதற்கு இல்லை.

என்ன சேர் யோசிக்கிறீங்கள் நமக்கு எல்லாம் மெரிஸ்டம் செல் இருந்தால் நல்லா இருக்குமே என்ன? கதவு இடுக்கிலே ஒரு கை இருக்கும் போது இன்னொரு கையாலே அதே கதவை சாத்தக் கூடாது என்று தெரியலை என்றால் அவன் என்ன சார் மனுஷன். ஆனால் ஒன்று.... காலம் போற போக்கிலே வன்முறைகள் அதிகமாக போய் விட்டது. மனிதன் அடிக்கடி கையை இழக்கிறதும் காலை இழக்கிறதும் சகயமாகிப் போய் விட்டது.

செயற்கைக் கால், செயற்கை கை என்று தேடி அலைய வேண்டிய அவசியம் ஏற்பட்டு போய் விட்டது. அதனாலே இதற்கு மேல் பிறக்கிற மனுஷன் எல்லாம் மெரிஸ்டம் செல் ஓட பிறந்தால் சௌகரியமாக இருக்கும். படைப்புத் தொழிலே ஈடுபட்டு இருக்கிறவனுக்கு இந்தத் தகவல் காதிலே வளர்ந்தால் மனிதனோட இந்த கோரிக்கையை அவசியமாக பரிசீலனை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பதை இறுகப் பற்றுவோம்

## 13 ஆவது திருத்தம் தொடர்பில் சித்தார்த்தன் எம்.பி



(வவுனியா)

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என புளொட் அமைப்பின் தலைவரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் இருக்கின்றது. அது போதும் எனக் கூறவில்லை. ஆனால் அதை ஏற்றுக் கொள்வதில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்களுக்குள் பலர் அதை மறுக்கின்ற தன்மை இருந்தாலும் கூட இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு தொடர்ந்து வருகின்ற அரசுகள் எல்லாம் எவ்வளவு பின்னடிக்கின்றது என்பதை கண்கூடாக காண்கின்றோம்.

இந்த நிலையில் இதை விட நாம் பெரிதாக பெறுவோம் என்று சொல்லி படிப்படியாக எங்களுடைய இனம் அதாவது வடக்கு - கிழக்கு தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டு வருகிறார்கள். இந்த வருடத்தில் வடக்கு - கிழக்கில் இருந்து ஏறக்குறைய சுமார் 20 ஆயிரம் பேர் நாட்டை விட்டு சென்றுள்ளார்கள்.

ஆகவே, கையில் இருப்பதையாவது இறுக்கமாக பற்றி வடக்கு - கிழக்கை கட்டியெழுப்பும் முயற்சி எடுக்க வேண்டும். இது ஒரு யதார்த்தமான முடிவு. சரியான முடிவு எனச் சொல்லவில்லை. சரியான முடிவை நோக்கிச் செல்ல வேண்டும். அதன்போது இருப்பதை இறுக்க பற்றிக் கொள்ள வேண்டும் என்பது தான் உண்மையான நிலைப்பாடு.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் 5 கட்சிகள் ஒற்றுமையாக ஜனநாயக தமிழ் தேசியகக் கூட்டணி என்ற பெயரில் இயங்கி வருகின்றோம். ஒவ்வொரு காலத்திலும் தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு காரணங்களுக்காக அந்த ஒற்றுமை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள்து நியாயமான கோரிக்கைகளை நோக்கி நகர்வதற்காக ஒற்றுமையாக அமைக்கப்பட்ட அமைப்பு இது. தமிழ் தேசியப் பரப்பில் இருக்கக் கூடிய கட்சிகள் அனைத்தும் இதில் இணையக் கூடிய வகையில் தான் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளும் இதில் வந்து இணைவார்கள். அந்த ஒற்றுமையின் மூலமே நியாயமான தீர்வை பெற முடியும். அதற்கு தான் மக்கள் ஆதரவு கிடைக்கும். அதன் மூலம் மக்களது அபிலாசைகளை அடைய முடியும் எனத் தெரிவித்தார். (நி-5)

# கவிச்சக்கரவர்த்தி கம்பன் நினைவுதினம் அனுஷ்டிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா, சூசைப்பிள்ளையார் குளம் சந்தியில் அமைந்துள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பனின் நினைவுச்சிலையடியில் கம்பன் நினைவுதினம் நேற்று நகர சபையின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.

இதன்போது கம்பனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, அங்கு வருகை தந்திருந்த அனைவரினாலும் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் சிறப்புரைகளும் இடம்பெற்றிருந்தன.

இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(நி-5-250)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை புதன் கிழமை பி.ப 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் கலந்து கொள்ள வுள்ளார். (நி-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சங்கத்தின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தலைவர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர், திருமதி. உதயகுமார் யசோதா, சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் திருமதி. ஆனந்த கிருஷ்ணன், தர்மாம்பிகை, கௌரவ விருந்தினராக யாழ். மாவட்டச் சங்கத் தலைவர் அப்புத்துரை அருந்தவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5)





அபிலாஷினி




கோபினா




கஸ்தூரி




மாதங்கி




வசந்தன்




முகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 438





ஆயினும் என்ன செய்வது? தாங்கள் பிடிவாதமாக இருக்கிறீர்கள் என் பேரில் குற்றமில்லை. இதற்கு இங்குள்ளவர்கள் எல்லாரும் சாட்சி! என்றான்.

இளவரசர், அவ்வளவு அவசரமாகப் போக வேண்டுமா? தாங்களும் சேனாதிபதியோடு தொண்டைமானாறு வரை வந்து விட்டுப் போகக்கூடாதா?" என்று கேட்டார்.

அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தையாயிருக்க மாட்டேன். நான் வந்த கப்பல் திருகோணமலையில் நிற்கிறது. அங்கே போய்க்கப்பல் ஏறிக் கூடியசீக்கிரம் நான் காஞ்சிக்குப் போக வேண்டும். கரிகாலரிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும்!" என்றான் பார்த்தி பேந்திரன்.

பின்னர் வந்தியத்தேவனைப் பார்த்து வல்லத்தரையனே! என்னுடன் நீ காஞ்சிக்கு வரவில்லையா? என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறிது திடுக்கிட்டு நின்றுவிட்டு, இல்லை இளவரசருடன் போக விரும்புகிறேன் என்றான்.

நல்லது என்னுடன் வராததற்காகப் பிறகு வருத்தப்படுவாய்! என்று சொல்லிவிட்டுப் பார்த்திபேந்திரன் புறப்பட்டான். சேனாதிபதியின் கட்டளையின்படி அவனுடன் இன்னும் சில வீரர்களும் கிளம்பிச் சென்றார்கள்.

வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானிடம், அந்தப் பல்லவன் கூறியதன் பொருள் என்ன? தன்னுடன் வராததற்காக நான் வருத்தப்படுவேன் என்று ஏன் கூறினான்? உமக்கு ஏதாவது தெரிகிறதா? என்று கேட்டான்.

"சேனாதிபதியும் அவனும் கலந்து பேசி ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்! அதன் விவரம் இன்னதென்று தானே சீக்கிரத்தில் தெரியும். உண்மையில், இப்போது ஏற்பட்டிருக்கும் சங்கடத்துக்கு மூல காரணம் இந்தக் கொடும் பாளூர் கிழவர்தான்! என்றான்.

அது எப்படி? சேனாதிபதி என்ன செய்திருக்க முடியும்?

எல்லாம் அவருடைய வேலை தான். அவருடைய குடும்பப் பெண் ஒருத்தி பழையாறையில் வளர்கிறாள் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?

நன்றாய்த் தெரியும் வானதி தேவியைத்தானே சொல்கிறீர்?

ஆமாம் அந்தப் பெண்ணை இளவரசருக்குக் கலியாணம் செய்து கொடுத்து இலங்கை அரசராக இவருக்கு முடிசூட்டி விட வேண்டும் என்று சேனாதிபதிக்கு ஆசை. பக்த குருக்களைக் கொண்டு இலங்கைக் கிரீடத்தை அளிக்கும்படி ஏவியவர் இவர்தான். இவருடைய முயற்சியை இரகசியமாக வைத்திருக்கவாவது தெரிந்ததா? அதுவும் இல்லை. செய்தி தஞ்சைக்கு எட்டிவிட்டது. அதனால் தான் முதன் மந்திரி அநிருத்தர் இலங்கைக்கு வந்தார், என்னையும் இளவரசரிடம் அனுப்பி வைத்தார். வந்தியத்தேவா! எது எப்படியானாலும் நம்முடைய உயிரை நாம் பத்திரமாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் இளவரசர் இலங்கைச் சிம்மாசனத்தை ஏற்க மறுத்தது பற்றி நீயும் நானும் தஞ்சையில் சாட்சி சொல்லும்படி நேரிடலாம்!

இதற்குள் சேனாதிபதியின் காரியங்கள் முடிந்துவிட்டன. அவருடன் வந்திருந்த படை வீரர்களில் நாலுபேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வெவ்வேறு திசையில் புறப்பட்டுச் சென்றார்கள்.

கடைசியாக இளவரசரின் கோஷ்டியும் புறப்பட்டது. இளவரசர், சேனாதிபதி, வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான் இவர்களுடனே மேற்கூறிய நாலு வீரர்களும் உயர்ந்த சாதிக்குதிரைகள் மீதேறி வடதிசை நோக்கிப் புறப்பட்டார்கள். இவர்களைப் பின்தொடர்ந்து பூங்குழலி ஏறியிருந்த யானை, ஜாம் ஜாம் என்று கம்பீரமாக நடந்து வந்தது. பூங்குழலியைத் தவிர அதன் மீது யானைப்பாகன் ஒருவன் மட்டுமே ஏறிக் கொண்டிருந்தான்.

கொஞ்ச தூரம் இராஜபாட்டை வழியாக அவர்கள் சென்றார்கள். ஆனால் இராஜபாட்டையில் பிரயாணம் செய்வது சுலபமாக இல்லை, வழியெங்கும் ஜனக்கூட்டமாயிருந்தது. இளவரசர் அவ்வழியில் வருகிறார் என்பதும் எப்படியோ ஜனங்களுக்குத் தெரிந்து போயிருந்தது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை



(நேற்றைய தொடர்ச்சி)

தங்கள் பணம் மூன்று லட்சம் ரூபாய் திருடு போய் விட்டதாக அந்த இருவரும் போலிசாரிம் புகார் கொடுத்தார்கள். உங்களுக்கு யார் மீதும் சந்தேகம் இருக்கிறதா என்று அவர்கள் கேட்டதற்கு உடனே முனியாண்டியை அழைத்து போய் காவல் நிலையத்தில் அந்த இரு வரும் ஒப்படைத்தனர். அவன் காவல் துறை அதிகாரியிடம், இந்த ஊரில் நல்லரசன் என்று ஒருவன் இருக்கிறான்.

நேற்று இரவு இவர்களுடைய வீட்டில் இருந்து பணத்தை திருடிக் கொண்டு வேகமாக போனதை என் கண்களாலே பார்த்தேன். நீங்கள் அவனை விசாரித்தால் எல்லா உண்மைகளும் தெரிந்துவிடும் என்று அவன் கூசாமல் பொய் சாட்சி சொன்னான்.

காவலர்களும் நல்லரசன் வீட்டுக்கு சென்றனர். அவன் வீட்டை சோத னையிட்டனர் வல்லரசனுக்கு தெரியாமல் முனியாண்டி கொண்டு வந்த மூன்று லட்சம் ரூபாய் அந்த வீட்டு மூலையில் இருந்ததை காவல் அதிகாரிகள் கைப்பற்றினர்.

அவர்கள் நல்லரசனை பார்த்து, இந்தப் பணம் உங்கள் வீட்டில் எப்படி வந்தது?" என்று கேட்டார்கள். நல்லரசன் நிதானத்தை இழக்காமல், சார், இந்த பணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது எப்படி இங்கே வந்தது என்பதும் எனக்கு தெரியாது. இதில்ஏதோ சதித் திட்டம் இருக்கிறது.

அந்த முனியாண்டியை நீங்கள் கண்காணித்தால் உங்களுக்கு விடயம் தெரிந்து விடும். உங்களோடு விசாரணைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறேன் என்றான். ஊர் மக்களின் நன்மதிப்புக்குரியவன் நல்லரசன் என்பதால் அவனுக்கு மதிப்பு கொடுத்து காவல் அதிகாரிகள் முனியாண்டி வீட்டுக்கு சென்று சோதனை இட்ட னர்.

அவன் வீட்டிலிருந்து சில ரூபாய் கட்டுகளை காவல்துறையினர் கைப்பற்றினார்கள். அந்த கட்டுகளை சோதித்ததில் அவை அனைத்துமே கள்ள நோட்டுகள் என்பது தெரிந்தது. முனியாண்டி சிறையில் அடைக்கப்பட்டான்.

கள்ள நோட்டு வழக்கில் அவன் பெயரை சேர்த்தார்கள். அதை அறிந்த முனியாண்டி காவல் அதிகாரியை பார்த்து, சார், எனக்கு அது போல் புத்தி எல்லாம் கிடையாது. பணத்துக்கு ஆசைப்பட்டு உத்தமரான நல்லரசனுக்கு எதிராக பொய்ச் சாட்சி கூறினேன்.

அதுக்கு கடவுள் எனக்கு சரியான தண்டனை கொடுத்துவிட்டார். தங்கவேலும், கருப்புசாமியும் இருவரும் தான் என்னை இவ்வாறு செய்ய சொன்னார்கள். மற்றபடி கள்ள நோட்டுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று எல்லா உண்மையையும் கூறிவிட்டான்.

உடனே காவற் துறை அதிகாரிகள் தங்கவேலு மற்றும் கருப்பசாமியையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்நிகழ்ச்சியின் மூலம் நல்லரசின் மீது மக்களுக்கு இருந்தன் நன்மதிப்பு மேலும் கூடியது.

நீதி : யார் மீதும் எப்பொழுதும் பொய் சாட்சி சொல்ல கூடாது. அது ஒரு நாள் வெளிப்பட்டு பொய்ச் சாட்சி கூறியவரே தண்டனைக்கு உட்படுத்தி விடும். எனவே, அனைவரும் மன சாட்சிக்கு உட்பட்டு நல்லவர்களாக வாழ வேண்டும். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் நேர்மை இருந்தால், நீங்கள் கூறவிரும்புவதை எப்படிக் கூறுவது என கவலைப்படத் தேவையில்லை. - ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கண்ணாத்தாள் படத்தில் வரும் கோபாலு போல மைத்திரியும்...

கண்ணாத்தாள் என்ற திரைப்படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் நடிப்பு அபாரம்.

அதில் சு.ப. என்ற பெயரில் ஆடுகளைத் திருடுகின்ற வேலையில் வடிவேலு ஈடுபட்டிருப்பார்.

ஒரு நாள் தனது ஆட்டை சு.ப. திருடிச் செல்வதைப் பார்த்த ஆட்டின் உரிமையாளர் கோபாலு, பஞ்சாயத்துச் சபையில் முறைப்பாடு செய்வார்.

விசாரணை நடக்கும். அந்த விசாரணையின்போது, ஆட்டு உரிமையாளரை வடிவேலு வெருட்டித் தள்ளுவார்.

போதாக்குறைக்கு கையில் ஓர் அரிவாளுடன் அங்கும் இங்குமாகச் சுற்றிச் சுழலும் சு.ப. உண்மையைச் சொன்னால் அரிவாளால் வெட்டித் துண்டு போடுவேன் என்பதை ஆட்டு உரிமையாளருக்கு சைகை மூலம் உணர்த்துவார்.

அவ்வளவுதான் நடுங்கி ஒடுங்கிய கோபாலு; ஐயா! எனது ஆடு களவு போகல்ல. களவு போனது போல ஒரு கனவு கண்டேன். என்னை மன்னிச்சுடுங்க என்று கூறியபடி பஞ்சாயத்து விசாரணையில் இருந்து ஓடிப் போய்விடுவார்.

இதை நாம் கூறும்போது அட, இப்ப இந்த நகைச்சுவை கட்டத்தைப் பிரஸ்தாபிப்பதற்கு என்ன தேவை வந்துற்றது என நிச்சயம் நீங்கள் கேட்கவே செய்வீர்கள்.

ஆம், ஈஸ்டர் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி யார் என்று தனக்குத் தெரியும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டால், அந்தத் தகவலை வெளிப்படுத்துவேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அவ்வளவுதான் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறியதும் சு.ப. போல அவசரப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ; மைத்திரியைப் பார்த்து எங்கே? சூத்திரதாரியை சொல்லும் பார்க்கலாம் எனக் கூற, இப்போது குறித்த சம்பவம் பூதாகரமாகியுள்ளது.

ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பது தெரிந்தால், அதனை மைத்திரிபால சிறிசேன பகிரங்கப்படுத்தியே ஆக வேண்டும்.

ஏனெனில், மிக மோசமான ஈஸ்டர் குண்டுத் தாக்குதலானது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது நடந்ததாகும்.

தவிர, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து புலனாய்வுத் தகவல்கள் ஏலவே வெளிவந்திருந்தபோதிலும் அது விடயத்தில் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தவில்லை.

அவர் கவனம் செலுத்தியிருந்தால், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைத் தடுத்திருக்க முடியும் என்ற விமர்சனங்களும் உண்டு.

இந்நிலையில் நீதிமன்றம் உத்தரவிடாத விடத்தும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பதை மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பதுதான் நீதியும் தார்மீகக் கடமையுமாகும்.

எது எவ்வாறாயினும் கண்ணாத்தாள் படத்தில் வருகின்ற கோபாலு போல முன்னாள் ஜனாதிபதி மைத்திரி உரிய சூத்திரதாரியை வெளிப்படுத்தாவிட்டால், அது அவரின் சுய கௌரவத்துக்கு மிகப்பெரும் பங்கமாக அமையும் என்பது மட்டும் உண்மை.

# தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்களால் பாடசாலை தினத்தில் கவனயீர்ப்பு முன்னெடுப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்கள் பாடசாலையின் 27 ஆவது ஆண்டு தினத்தினை முன்னிட்டு நேற்றுக் காலை மாணவர்களால் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கால கட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் போதையாலும், சமூக சீர்கேடுகளாலும் அழிந்து கொண்டு செல்கின்றார்கள். இவற்றில் இருந்து மாணவர்களை மீட்டு கல்வியினை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கோடு தேராவில் தமிழ் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து இந்த கவனயீர்ப்பினை முன்னெடுத்தனர்.

பாதுகாப்போம் இயற்கை வளத்தினை பாதுகாப்போம், இளவயது திருமணம் வேண்டாம், இளையோரே கொஞ்சம் கேளீர், அழிக்காதே அழிக்காதே மாணவர்கள் கல்வியினை அழிக்காதே, ஒழிப்போம் ஒழிப்போம் சிறுவர் துஷ்பிரயோகத்தினை ஒழிப்போம், சிறுவர்களின் உரிமையினை பாதுகாப்போம் உள்ளிட்ட கோசங்கள் எழுதிய பாதாதைகளை தாங்கியவாறு மாணவர்கள் கவனயீர்ப்பினை முன்னெடுத்திருந்தனர். (நி-5-299)

## 6 மணித்தியால விசாரணைக்குப் பின்

# குற்றப்புலனாய்வு திணைக்களத்திலிருந்து வெளியேறினார் மைத்திரிபால

(கொழும்பு)

வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருகை தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 6 மணித்தியாலங்களின் பின் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்களை தமக்கு தெரியும் என மைத்திரிபால சிறிசேன கண்டியில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

குறித்த அறிக்கை தொடர்பில் அவசர விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்நிலையில் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை 10.30 மணி அளவில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பால்மா விலைகுறைப்பு போதுமானதல்ல

## நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் குறைக்கப்பட்ட பால் மாவின் விலை போதுமானதல்ல என நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பால் மாவின் விலைகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இதன்படி இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் நிறையுடைய பால் மா பொதியொன்றின் விலை 150 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 400 கிராம் நிறையுடைய பால் மா பொதியொன்றின் விலை 60 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# ரோஹித இருக்கும் வரை உறுப்பினர்களை நியமிக்கமாட்டோம்

## கோப் தொடர்பில் ஐ.ம.ச

(கொழும்பு)

பொது விவகாரங்களுக்கான பாராளுமன்ற குழுவிற்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அந்தக் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தன இருக்கும் வரை தாம் தமது கட்சியிலிருந்து உறுப்பினர்களை நியமிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன கோப் குழுவின் தலைவராக நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் கோப் குழுவின் 30 உறுப்பினர்களில் 11 பேர் இராஜினாமா செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஈஸ்டர் தின தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்பு

## ஜே.வி.பி. தலைவர் அநுர

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றபோது ஜனாதிபதியாகப் பதவி வகித்த மைத்திரிபால சிறிசேனவே அதற்கு பொறுப்புக் கூறவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க அங்கு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது" உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் அதிகாரி எம்முடன் உள்ளார். எனவே நிச்சயமாகத் தீர்வு வரும். உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் குறித்து 2025 ஆம் ஆண்டிலாவது உண்மையை கண்டறியவேண்டுமென கனடாவில் உள்ள கத்தோலிக்க சமுகம் எதிர்பார்க்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி யார் எனத் தனக்குத் தெரியுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது கூறியுள்ளார். தாக்குதல் நடைபெற்ற போது அவர்தான் ஜனாதிபதி. அவருக்குத்தான் இது தொடர்பான முழுப்பொறுப்பும் உள்ளது.

இத் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் அதிகாரி நம்மோடு உள்ளார். எனவே கண்டிப்பாகத் தீர்வு கிடைக்கும் இவ்வாறு அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7,10)

## சத்துணவுக்கு 16,600 மில்லியன்

(கொழும்பு)

மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்திற்கு ஜனாதிபதியினால் 16, 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தொலைதூர மாகாணங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்த உணவுத் திட்டம் முன்பு செயல்படுத்தப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தொடக்கம் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை உள்ள மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தோம் என்றார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

30

தமிழ் செம்மொழி கோரிக்கையை அரசின் கோரிக்கையாக ஏற்று அதற்குரிய ஆவணங்களை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார். இதன்பின்னர் இதுகுறித்து பலமுறை நினைவூட்டல் கடிதங்கள் தந்தும் பதிலில்லை.

2000 ஆம் ஆண்டில், டில்லி செம்மொழிமாநாட்டில் பேசியதமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர், "முதல்வர், மண்வை முஸ்தபா விடுத்த கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த்துறை செயலரைப் பணித்தார். ஆனால் அச்செயலரோ, தமிழை செம்மொழி ஆக்கினால், அதை செத்தமொழிகளுடன் சேர்த்ததாகிவிடும் என்றுகூறி அக் கோப்பை முடித்துவிட்டார் என்று பதில்தந்தார்.

2000 ஆண்டில் அமெரிக்கப் பேராசிரியர் ஜார்ஜ் எல் .ஹார்ட் தமிழின் செவ்வியல் தன்மைபற்றி வெளியிட்ட கட்டுரையில், "தமிழின் செவ்வியல் தன்மையைமறுப்பது, இந்தியப் பண்பாட்டின் உயிர் மூச்சாய் விளங்குவனவற்றுள் ஒன்றைமறுப்பதற்கு ஒப்பாகும்" எனஎழுதுகிறார். 2002-2003 இல் டில்லி தமிழ்ச் சங்கம், பெங்களூர் தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், தலைநகர் தமிழ்ச்சங்கம் மேலும் பல அமைப்புகள் தொடர்ந்து தமிழை செம் மொழியாக்க அரும்பாடுபட்டன.

2004 இல் கரந்தை தமிழ்ச்சங்கம், கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்தி, ஒருகோடிபேரிடம் கையெழுத்து பெற்று நடுவண் அரசிற்கு அனுப்பியது. தமிழக அரசின் சார்பில் தமிழ் ஒருசெம்மொழி எனமத்தியஅரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையும், பல்கலைக் கழகமானியக் குழுவும் அறிவிக்க வலியுறுத்தி, தேவகவுடா, ஐ.கே. குஜ்ரால், வாஜ்பாய் போன்ற, இந்திய முதன்மைஅமைச்சர்களுக்கு கடிதங்கள் எழுதப்பட்டன.

2004 ஆம் ஆண்டு யூலை 6ஆம் திகதி அன்றைய குடியரசுத்தலைவர் அப்துல்கலாம், பாராளுமன்ற இரு அவைக்கூட்டுக் கூட்டத்தில் "தமிழ் செம்மொழி" என அறிவிக்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும், ஐக்கியநாடுகள்கல்வி, அறிவியல், பண்பாட்டுநிறுவனம் (UNESCO), செம்மொழிக்கான வரையறைகள் அதனிடம் இல்லை என்பதையும் தன்னிடம் இவை இவையே செம்மொழி என்று எந்த பட்டியலும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறது. தமிழைச் செம்மொழியாக அறிவிக்கும் கோரிக்கை குறித்து கருத்து கேட்க "சாகித்திய அகடெமி" நிறுவனத்தை அணுகியது நடுவண் அரசு.

அந்நிறுவனத் தலைவர் தன்னை தலைமையாகக் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை அமைத்தார். செப்டம்பர் 2, 2004 இல் கூடிய அக் குழு "செம்மொழி" என்பதற்கான வரையறை எங்கும் காணப்படாததை கண்டறிந்தது. மேலும், உலகளாவிய அளவில் செம் மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சமஸ்கிருதம், இலத்தின், கிரேக்கம் ஆகிய மொழிகள், எதன் அடிப்படையில் செம் மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதைஆராய்ந்தது. ஒரு மொழியை செம்மொழியாக அறிவிக்க தகுதிகளை வகுத்தது.

பலருடைய தொடர்முயற்சிகளுக்குப் பின் 12.10.2004 இல் தமிழ் மொழி செம்மொழி என நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டது. அதற்குப்பின் இந்திய செம்மொழிகளின் பட்டியலில் சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008 ), கன்னடம் (2008) ,மலையாளம் (2013), ஒடியா (2014) சேர்க்கப்பட்டது.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து செம்மொழி மாநாடு 2010 ஆம் ஆண்டு ஜூன் 23 முதல் ஜூன் 27 வரையிலான 5 நாட்கள் கோயம்புத்தூரில் கொடிசியா வளாகத்தில் நடைபெற்றது.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு**

உலகத்தமிழ் மாநாடுகளை நடத்தும் பொறுப்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கே உள்ளது. முதலில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை அணுகிய அன்றைய தமிழ் நாட்டு முதல்வர் கருணாநிதிக்கு பரவலான எதிர்ப்பே எழுந்தது. ஜப்பானிய கல்வியாளரும், தமிழ் மொழியில் மேதையுமான பேராசிரியர் நோபோரு கராஷிமா மாநாடுநடத்த போதியஅவகாசம் இல்லை என்று கூறி மாநாட்டை உடனே நடத்த மறுத்தார். அவர் மாநாட்டினை நிராகரிக்கவில்லை. ஆனால் கூடுதலான அவகாசத்தையே கேட்டார். ஆனால் கருணாநிதிக்கு உடனடியாக மாநாடு நடத்தியாக வேண்டிய நிர்ப்பந்தம்.

சிலமாதங்களில் செம்மொழி மாநாட்டினை நடத்தியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் தமிழுக்கு நேர்ந்தது அசாதாரணமானது தான். சில மாதங்களில் ஒரு மாநாட்டினை நடத்த வேண்டும் என்றால், ஒரு புதிய தமிழ் அமைப்பினை உருவாக்க வேண்டும். அதைத் தான் கருணாநிதி செய்தார். உலகசெம் மொழி நிறுவனத்தை புதியதாக உருவாக்கி அந்த நிறுவனம் மூலமாக மாநாடு நடத்தப்பட்டது. இதனால் இது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடாக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

உலகத் தமிழ் மாநாட்டின் பட்டியலில் இந்த மாநாடு இடம்பெறவில்லை எனினும், இதன் உள்ளடக்க நிகழ்வுகளும், செயற் திட்டங்களும் அவற்றை ஒத்தவையாகவே திட்டமிடப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்த செம்மொழி மாநாடு குறித்து, பல்வேறு எதிர்மறையான விமர்சனங்களும் தமிழகத்தில் எழுந்திருந்தன.

**அவற்றில் முக்கியமானவை இரண்டு .....**

- ஈழத் தமிழர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி உள்ள நிலையில் இத்தகைய மாநாடு தேவையா?
- இத்தகைய மாநாடுகளால் எந்தப் பயனும் இல்லை. பின்னர் எதற்கு இந்த செம்மொழி மாநாடு?

இவற்றுக்கான பதில் பின்வருமாறு இருந்தது.

மேலோட்டமாக பார்த்தால், இந்த இரண்டு கேள்விகளிலுமே நியாயம் இருப்பதைப்போல தோன்றும். எனினும் இவற்றின் அடிப்படையில், செம்மொழி மாநாட்டிற்கான நியாயத்தை நாம் முற்றிலுமாக நிராகரித்துவிட முடியாது. ஈழத் தமிழர்களுக்கு தற்போது நேர்ந்திருப்பது, போராட்ட வழிமுறை தொடர்பான தற்காலிக தோல்வியே.

உரிமைப் போராட்டத்திற்கான நியாயங்கள் இருக்கும் வரை, போராட்டம் வேறு வடிவங்களில் தொடர்வதை தவிர்க்க முடியாது. போர்க்களத்தில், வீரர்களுக்கு சோர்வு ஏற்படும் போது, தளபதிகள் தங்களின் எழுச்சி முழக்கங்களால் அவர்களைத் தட்டி எழுப்பும் காட்சிகளை, புறநானூற்று இலக்கியங்கள் எங்கும் காண முடிகிறது! அதனைப் போலத்தான் இதுவும்.

அது மட்டுமல்ல. தற்போதைய போராட்டத்திற்காக தங்களை தகவமைத்துக் கொள்வதில் தமிழர்கள், யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை உலகுக்கு உரத்துச் சொல்லும் நிகழ்வாகவும் இதனைப் புரிந்து கொள்ளலாம். ஈழத்தமிழர்களுக்கான அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்த விவாதங்களும், வேலைத் திட்டங்களும் உருவாவதற்கான தொடக்கமாகவும் இந்த மாநாடு அமையலாம்.

இரண்டாவது கேள்வி இது போன்ற மாநாடுகளால் என்ன பயன் என்பது.

சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகமும் உருவானது இது போன்ற உலகத் தமிழ் மாநாடுகளின் விளைவாகத்தான். இது போன்ற மாநாடுகளின் மூலமாக வைக்கப்பட்ட ஓயாத கோரிக்கைகளின் மூலமாகத்தான், தமிழின் செம்மொழித் தகுதிக்கு அங்கீகாரம் கிடைத்தது.

1964ஆம் ஆண்டு தனிநாயக அடிகளார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மு.வரதராசனார் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் சேர்ந்து உருவாக்கிய தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகத்தான், பின்னர் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகள் அனைத்தும் அரங்கேறின. எனவே, சில குறைகள் இருப்பதை கணக்கில் கொண்டு, இத்தகைய மாநாடுகளே தேவையில்லை என்று சொல்லிவிட முடியாது.

எனினும், தமிழ் வழிக்கல்வி, கல்வெட்டுகள் ஆய்வு, தமிழை முழுமையாக கணிணி மயப்படுத்துதல், நவீன படைப்புகள் குறித்த ஆக்கரீதியான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் இந்த மாநாடு கவனம் செலுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உலகத் தமிழர்களின் மத்தியில் நிலவி வருகிறது என்று கூறப்பட்டது.

கோவை செம்மொழி மாநாட்டில், முகப்பரங்கம், தனிப் பொழிவரங்கம், கலந்துரையரங்கம், அமர்வரங்கம் போன்ற அரங்குகளில், 70இற்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. வெளிநாடுகளில் இருந்து பார்வையாளர்கள் 1,644 பேரும், கட்டுரையாளர்கள் 1,020 பேரும் பங்கேற்றனர். இதுவரையில் நடைபெற்ற மாநாடுகளில், இந்த அளவு எண்ணிக்கையில், வெளிநாட்டு ஆய்வாளர்கள் பங்கேற்றதில்லை.

சங்க இலக்கியத்தின் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுடன் பெண்ணியம் உள்ளிட்ட தற்கால இலக்கியப் போக்குகளையும் உள்ளடக்கிய ஆய்வு அரங்குகளும் இந்த மாநாட்டில் இடம்பெற்றிருந்தன. தமிழ் இனம் கடும் இழப்புகளைச் சந்தித்துள்ள தருணத்தில் நடைபெறும் இந்த மாநாடு வெறும் விளம்பர களியாட்டமாக முடிந்து விடக்கூடாது என்ற பதைப்பு உலகத் தமிழர்கள் அனைவருக்கும் இருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்...

வழங்கப்படவுள்ள 10 கிலோ அரிசி, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓய்வூதியக் கொடுப்பனவாக அதிகரிக்கப்பட்டுள்ள 2,500 ரூபாய் தொகை ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## மந்திகையில்...

மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மாலை 5.20 மணியளவில் மந்திகை இலங்கை வங்கிக்கு முன்பாக இடம்பெற்ற இவ் விபத்தில் துன்னாலை மேற்கைச் சேர்ந்த குமரேசமூர்த்தி வனிதா (வயது-51) என்பவரே படுகாயம் அடைந்தார்.

பருத்தித்துறையில் இருந்து துன்னாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வேகமாக வந்த ஹயஸ் வாகனம் மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளது. (ம-7,10,60)

## அனைத்து...

அனைத்து பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, பொலிஸ் குழுக்கள் மற்றும் அந்தந்த தேவாலயங்களின் பாதிரியார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7,10)

## பயங்கரவாதி...

ணர்களை ஈடுபடுத்துவது சிறந்தது.

தாக்குதலுக்கு காரணமான பயங்கரவாதிகளை கண்டுபிடிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கறை காட்டுவதில்லை.

ஏனென்றால், இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை தேடுவதில் அவருக்கு விருப்பமில்லை என்றார். (ம-7,10)

## நிதியமைச்சுக்கு...

துறைசார்ந்த நிர்வாக அதிகாரிகளால் பதவி உயர்வு கோரி நிதியமைச்சுக்கு எதிராக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது, நேற்று கொழும்பு நிதியமைச்சுக் கட்டிடத்திற்கு முன்னால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, நிர்வாக அதிகாரிகளின் பதவி உயர்வுக்கான அமைச்சரவை அனுமதிப் பத்திரத்திற்கு உடன் அங்கீகாரம் வழங்குமாறு அரச நிர்வாக அதிகாரிகளின் கூட்டுக் குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ம-7,10)

## விற்பனைப்...

யில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் விற்பனைப் பயிலுநராகக் கடமையாற்றும் குறித்த நபர் கொழும்புத்துறையில் ஆண் ஒருவர் குளிக்கும்போது தொலைபேசியில் படம் பிடித்துள்ளார்.

இந்நிலையில் பொதுமக்களால் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். அவரது தொலைபேசியை சோதனையிட்டபோது பெண்கள் குளிக்கும் அதிகளவான வீடியோ தொலைபேசியில் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபர் பொதுமக்களால் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-7,10)

## நாடு கடத்தப்பட்ட...

அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தந்தை, தாய் மற்றும் இரு பிள்ளைகள் இவ்வாறு நாடுகடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு இந்த தம்பதியர் சுவிட்ஸர்லாந்து சென்றிருந்த நிலையில், அங்கு புகலிடக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், இந்த தம்பதியினருக்கு அங்கு இரு குழந்தைகள் பிறந்துள்ளன. தற்போது ஏழு மற்றும் மூன்று வயதாகும் குழந்தைகளுடன் இந்த குடும்பத்தினர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## அரசியல் கூட்டணி...

ஜனாதிபதித் தேர்தலையொட்டி அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

# தேர்தலை பிற்போடும் முயற்சியில் அரசாங்கம்

## கனடாவில் அநுரகுமார

(ஒட்டாவா)

**ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான உத்தேச அரசமைப்பு சீர்திருத்தங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது என அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கனடாவில் இலங்கைவாழ் சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள அவர்,

இந்த தருணத்தில் தேசிய தேர்தலை தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என அநுரகுமார தெரிவித்துள்ளார்.

தாங்கள் அதிகாரத்தை இழக்கப் போகின்றோம் என்ற அச்சம் காரணமாகவே அவர்கள் இவ்வாறு செய்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

அதன்படி, ஜனாதிபதி தேர்தலையொட்டி அரசியல் கூட்டணி அமைப்பதாக இருந்தால் அது பற்றிப் பேசுவதற்காக மே மாதத்துக்குப் பின் என்னிடம் வாருங்கள் என்று முன் னாள் ஜனாதபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சிகளிடம் கூறியுள்ளார்.

மேலும், மே மாதத்துக்குப் பின்பே தேர்தல் விடயங்கள் சூடுபிடிக்கும் என்றும், அப்போது கூட்டணி அமைப்பது தொடர்பில் செயலில் இறங்குவதே பொருத்தமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## தொடர்...

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்டோரின் முறைப்பாடுகளின் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மதம்சார் விடயங்களை பாதிக்கும் பல்வேறு சம்பவங்கள் குறித்து புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்

மஹஜன சம்பத
திகதி 2024.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 5430
K 3 2 6 8 6 5
அத சம்பத
K 6 8 6 5
சீட்டிழுப்பு இலக்கம் 005
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1460
Q 34 54 60 64 Q
Double Chance 32402

மெகா பவர்
திகதி 25/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1778
K 14 03 06 64 71
Double Chance 13838

லக்கி 7 VIP
திகதி 2024.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 0256
O 5 9 5 2 7 1 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3672
சீட்டிழுப்பு திகதி 25.03.2024
E 30 46 60 79
E 22910
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 0739
கும்பம் 10 36 44 46 கும்பம்
59335 17

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.03.2024 வெற்றி வாரம் 138 வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து U மற்றும் வெற்றி இலக்கம் 9 2 5 0 5 5
50588 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் 31,881,144.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2404 வர்ணம் ஊதா சீட்டிழுப்பு திகதி 25.03.2024 தினம் திங்கள்
23 28 46 66 F
43829
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,235,171.20

திகதி 2024.03.25 வெற்றி வாரம் 4565 வர்ணம் இளம் நீலம்
சனிதா
31 44 47 66 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,146,606.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4116 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.25 தினம் திங்கட்கிழமை
04 08 21 43 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 13,828,240.00
480911

கப்ருக
W 17 09 30 33 34
சீட்டிழுப்பு வாரம் 1580
வர்ணம் பச்சை
2024.03.25 திங்கள்
894433
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 513,976,105.40

ஜயோதா Jayoda
திகதி 2024.03.25 வெற்றி வாரம் 2011 வர்ணம் செம்மஞ்சள்
11 20 44 65 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,656,875.60

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2230
சீட்டிழுப்பு திகதி: 2024.03.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.101,714,201.60
15 34 41 58 Q
849959


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# அந்தியேட்டி

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## நன்றி நவில்லும்



மண்ணில்
19.06.1960

விண்ணில்
25.02.2024

கடந்த 25.02.2024 ( ஞயிற்றுக்கிழமை ) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்.

# அமரர் இராசதுரை ரகுராதா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (28.03.2024) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளங்கள், துண்டுப்பிரசுரம், பதாதை மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

செல்வம் மில் வீதி,
உடுப்பிட்டி.

(193)

077 153 1225

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.